முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

**மாகாணக்கல்வித்திணைக்களம், வடக்குமாகாணம்**

**Provincial Department of Education, Northern Province**

**கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப்பரீட்சை - 2025**

**General Certificate of Education (Ord. Level) Third Term Examination, 2025**

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் **I,II**

**Information & Communication Technology I,II**

| **80** | **T** | **I,II** |
|---|---|---|

## தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் II

- முதலாம் வினாவிற்கும் ஏனைய **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து வினாக்களுக்கு** மாத்திரம் விடை தருக.
- முதலாம் வினாவிற்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாக்களிற்கு 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

***01.***


(i) அஸ்வின் கதைப்புத்தகம் ஒன்றைகடையில் வாங்கினார். பின்னர் அப்புத்தகத்தில் காணப்பட்ட QR குறியீட்டை தனது தொலைபேசி மூலம் வருடி புத்தகம் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற இணையத்தில் உள்நுழைந்தான். மேலே உள்ள முறைமைப் பயன்பாட்டுடன் தொடர்புடைய உள்ளீடு, வெளியீடு ஒவ்வொன்று வீதம் தருக?

(ii) $A1D_{16}$எனும் பதினறும எண்ணை எண்ம(octal) எண்ணாக மாற்றுக?

(iii)

(a) $Q=\bar{A}B+\overline{AB}$ எனும் பூலியன் கோவைக்குத் தொடர்புடைய மெய்நிலை அட்டவணையை வரைக.

(b) பின்வரும் தர்க்கச்சுற்றின்படி X,Y,Z ஆகிய உள்ளீடுகள் முறையே 1,1,1 ஆக இருக்கும் போது P,Q ஆகியவற்றிலுள்ள வெளியீடுகள் யாது?




(iv)

(a) வன்வட்டில் தரவுகளை வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் பயன்படுத்தப்படும் கூறு யாது?

(b) சேமிப்பக திறன் அதிகரிக்கும் வரிசையில் பின்வரும் சேமிப்பு சாதனங்களை ஒழுங்கமைத்து மீளவும் எழுதுக?
RAM, காந்த நாடா(Magnetic tabe), பதுக்கு நினைவகம் (Cache memory), DVD, பளிச்சீட்டு செலுத்தி (Flash drive)

(v)

a) நிகழ்த்துகை மென்பொருளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட நிகழ்த்துகை ஒன்றின் படவில்லைகளை முழுமையாகப் பார்வையிடப் பயன்படும் காட்சித் தத்தல் எது?

b) மேற்குறிப்பிட்ட வினா a) யின் விடைக்குரிய குறுக்குவழிச் சாவி எது?

(vi) அழிதகு நினைவகத்திற்கு இரண்டு உதாரணம் தருக?

(vii) பின்வரும் HTMLகுறிமுறைக்கான வெளியீட்டை எழுதுக?

<S>School</S>

<U>School</U>


(viii) முறைமைவிருத்திஆயுள்வட்டப் படிகளில் தீர்வினைச் சோதித்தலும் தவறுநீக்கலும் எனும் படியின் பிரதானநோக்கம் முறைமையிலுள்ள தவறுகளை நீக்குதலாகும். முறைமை பரீட்சிக்கப்படும் விதங்கள் பல உள்ளன. ஆவை பின்வரும் ஒழுங்கில் காணப்படும்..

அலகுச்சோதனை→A → B → C

இங்கு A, B, C இனால் குறிக்கப்படும் சோதனை முறைகளை ஒழுங்கு முறைப்படி எழுதுக?

(ix) கணினிகளைப் பயன்படுத்தும் போது அவற்றைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தாமையினால் பௌதீக மற்றும் தருக்கப் பிரச்சினைகள் எழுகின்றன. கணினிகளைப் பாதுகாக்கும் பௌதீகப் பாதுகாப்புமுறைகள் இரண்டும், தரவுகளைப் பாதுகாக்கும் தருக்கப் பாதுகாப்புமுறைகள் இரண்டும் எழுதுக?

(x) பின்வரும் பாய்ச்சல் கோட்டுப் படத்திற்குரிய வெளியீட்டை எழுதுக?




**2.** ஒரு தனியார் வைத்தியசாலை ஒன்றின் வைத்தியர்களினது கட்டண விபரம் தொடர்பான விபரங்களை பின்வரும் விரிதாள் காட்டுகின்றது.

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **JPJR Medical Centre** | | | | | | |
| 2 | **Date** | 12/31/2024 | | | **Center Charges** | 20% | |
| 3 | Maximum Doctor charge Amount | | 2500.00 | | | | |
| 4 | **DoctNo** | **DoctorName** | **No of Patients** | **Doctor Charge** | **Total Charge** | **Center Charge** | **Doctor Fees** |
| 5 | D102 | Dr. Innijavan Asanikka | 43 | 2500.00 | 107,500.00 | 21,500.00 | 86,000.00 |
| 6 | D104 | Dr. Anula Wijesundere | 32 | 2000.00 | 64,000.00 | 12,800.00 | 51,200.00 |
| 7 | D107 | Dr. Varnava Ratnajake | 37 | 2500.00 | 92,500.00 | 18,500.00 | 74,000.00 |
| 8 | D110 | Dr. Shana Akshaya | 26 | 2300.00 | 59,800.00 | 11,960.00 | 47,840.00 |
| 9 | D115 | Dr (Mrs). Sarath Nitharsha | 18 | 1800.00 | 32,400.00 | 6,480.00 | 25,920.00 |
| 10 | D120 | Dr. Ashal Kuperaa | 29 | 2500.00 | 72,500.00 | 14,500.00 | 58,000.00 |
| 11 | D125 | Dr. Indika Kamini | 32 | 2500.00 | 80,000.00 | 16,000.00 | 64,000.00 |
| 12 | D130 | Dr (Mrs). K.Sivagnanam | 15 | 2000.00 | 30,000.00 | 6,000.00 | 24,000.00 |
| 13 | | | | | | **107,740.00** | **430,960.00** |
| 14 | | Total Parients | 232 | | | | |
| 15 | | | | | | | |
| 16 | | | | | | | |

(i) Dr. Innijavan Asanikka எனும் வைத்தியர் நோயாளிகளை பார்வையிடுவதற்குரிய மொத்த கட்டணம் (Total charge) ஐக் கணிப்பதற்காக கலம் E5 இனுள் எழுதப்பட வேண்டிய சூத்திரம் யாது?

(ii) வைத்தியரினால் நோயாளிகளைப் பார்வையிடுவதற்கான மொத்தக் கட்டணம் (Total Charge) இன் 20% நிறுவனக் கட்டணம் (centre charge) ஆக ஒதுக்கப்படும் எனின் நிறுவனக் கட்டணத்தை கலம் F5 இல் கணிப்பதற்கான சூத்திரம் யாது?
(இச் சூத்திரம் ஏனைய வைத்தியர்களிற்கும் பிரதி செய்ய வேண்டும்)

(iii) பின்வருவனவற்றுக்கு பொருத்தமான சூத்திரத்தைத் தருக?

a. Dr. Innijavan Asanikka வைத்தியர் பெற்றுக்கொள்ளும் கட்டணத்தை கலம் G5 இல் பெறல்

b. Dr. Indika Kamini எனும் வைத்தியர் பெற்றுக்கொள்ளும் கட்டணத்தை கலம்G11 இல் பெறல்

(iv) நிறுவனம் பெற்ற மொத்தக் கட்டணத்தை F13 இல் காண்பதற்கான சார்பை =Function(cell1:cell2) எனும் வடிவில் தருக?

(v) ஒவ்வொரு வைத்தியர்களும் பெறப்பட்ட வருமானத்தை ஒரு வரைபில் காட்டுவதற்கு பொருத்தமான வரைபு வகை எது?

(vi) வைத்திருக்காக தீர்மானிக்கப்பட்ட கட்டணம் (doctor charge) *2500* ஆனது D5, D7, D10, D11 ஆகிய கலங்களில் மீளவும் மீளவும் பதியப்பட்டுள்ளது. இந்தக் கலங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள *2500* இற்குப் பதிலாக நுழைவு செய்யக்கூடிய மிகவும் உகந்த சூத்திரத்தை எழுதுக?

(vii) தரப்பட்ட பட்டியலில் இருந்து பின்வரும் கலம், கலவீச்சு வடிவமைப்புகளுக்குரிய பதங்களை தெரிவு செய்து **வினா இலக்கம் → இலக்கங்கள்** எனும் வடிவத்தை **மாத்திரம்** பயன்படுத்தி எழுதுக.

a. B2 b. E5:E12

**பட்டியல்:** {**1** - Font, **2** - Thousand separator, **3 -** Date, **4 -** Time, **5** - Decimal places, **6** - Percentage}

(viii) 12/31/2024 அன்றைய தினம் வருகை தந்த நோயாளிகளின் மொத்த எண்ணிக்கையை கலம் C14 இல் காண்பதற்குரிய சூத்திரம் யாதாக இருக்கலாம்?

***03.*** பின்வருவன ஒரு நூலகத்தில் மாணவர்கள், புத்தக விவரங்கள், இரவல் வழங்கும் விபரங்கள் ஆகியவற்றைப் பற்றிய தரவுகளைச் சேமித்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பகுதியாகக் காட்டப்படும் தொடர்புடைமைத் தரவுத்தள அட்டவணைகள் ஆகும்.

**புத்தக அட்டவணை**

| புத்தகஇல | புத்தகபெயர் | எழுதியவர்பெயர் | புத்தகறாக்கைஇல |
|---|---|---|---|
| B001 | Brave New World | Aldous Huxley | 11 |
| B002 | The Road | Cormac McCarthy | 8 |
| B003 | Dracula | Bram Stoker | 9 |
| B004 | Animal Farm | George Orwell | 6 |

**இரவல்பெற்ற அட்டவணை**

| புத்தகஇல | மாணவர்இல | இரவல்பெற்றதிகதி | மீளச்செலுத்தியதிகதி |
|---|---|---|---|
| B002 | S011 | 20/06/2025 | 23/06/2025 |
| B004 | S008 | 03/08/2025 | 06/08/2025 |
| B001 | S023 | 06/05/2025 | 09/05/2025 |
| B004 | S266 | 30/04/2025 | 03/05/2025 |

**மாணவர் அட்டவணை**

| மாணவர்இல | மாணவர்பெயர் | தரம் |
|---|---|---|
| S008 | குகன் | 8 |
| S023 | சர்மிலா | 9 |
| S266 | நிரோஜன் | 8 |
| S011 | டினான்சியா | 10 |

(i) பின்வரும் கூற்றுக்கள் உண்மையாயின் **உண்மை** எனவும் பொய்யாயின் **பொய்** எனவும் எழுதுக.

(a) புத்தகஇல எனும் புலம் இரவல் பெற்ற அட்டடவணையின் முதன்மைச்சாவியாகும்.

(b) புத்தகஇறாக்கை எனும் புலமானது புத்தக அட்டவணையில் அந்நியச்சாவியாகும்.

(ii) பின்வரும் மாற்றங்களுக்கு இடமளிப்பதற்கு இற்றைப்படுத்த வேண்டிய அட்டவணை /அட்டணைகள் யாது? / யாவை?

(a) சர்மிலா என்பவர் Animal Farm எனும் புத்தகத்தை 28/05/2025 அன்று இரவலாகப் பெற்றுக்கொண்டார்.

(b) தரம் 11ஐ சேர்ந்த சதுன் எனும் மாணவன் தனது பிறந்த நாளிற்கு Joseph Conrad ஆல் எழுதப்பட்ட Lord Jim எனும் நூலை நூலகத்திற்கு பரிசாக அளித்தார்.

(iii) மேலே பகுதி (ii) (a), (b) அல் குறிப்பிட்ட மாற்றங்களுக்கு பொருத்தமான அட்டவணைகளில் சேர்க்கப்பட்ட வேண்டிய புதிய பதிவு / பதிவுகளை அட்டவணையில் / அட்டவணைகளின் பெயருடன் எழுதுக.

அட்டவணையின் பெயர் ⟶ (புலம்1 ,புலம்2………) எனும் வடிவில் ஒவ்வொரு பதிவிற்கும் எழுதுக

குறிப்பு : சதுனுக்கு S015 எனும் மாணவர் இல ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) டினான்சியா ஆல் இரவல் பெறப்பட்ட புத்தகம் மீளப்பெறப்பட்டதா? என்பதை அறிய வினவல் செய்யப்படுமாயின் இணைக்கப்படவேண்டிய அட்டவணை / அட்டவணைகள் யாவை?

(v) Aldous Huxleyஆல் எழுதப்பட்ட Brave New World எனும் புத்தகத்தை இறுதியாகப் பெற்றுக்கொண்ட நபர் யார்?

***04.*** (i) நவீன் என்பவர் தனது கணினியில் நச்சுநிரலின் தாக்கம் உள்ளதாக சந்தேகிக்கின்றார் இச் சம்பவத்தினை அடிப்படையாக்கொண்டு எவ்வாறான பாதிப்பு செயற்பாடுகளை அவர் கணினியில் அவதானிக்க முடியும்?

(ii) கணனியில் காணப்படுகின்ற நச்சு நிரல் தாக்கத்தில் இருந்து நவீன் தனது கணினியை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இரண்டு தருக.

(iii) இலங்கை மக்களின் இணையவழி தகவல் பாதுகாப்புக்காக சேவையாற்றும் நிறுவனத்தை தருக.

(iv) அல்லாரை மகா வித்தியாலயம், தங்கள் ஒவ்வொரு தரங்களிலுமுள்ள மாணவர்களின் செயல்திறன் அளவைப் பதிவுசெய்து கையாள ஒரு கைமுறை தகவல் அமைப்பைப் பராமரிக்கிறது. இது பாடசாலை சொற்களஞ்சியத்தில் மதிப்பெண் புத்தகம் என்று அழைக்கப்படுகிறது. குறிப்பாக தேசிய அளவிலான தேர்வுக்கு தோற்றாத பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள், பெரும்பாலும் இந்த பழைய பதிவுகளைப் பெற வருகிறார்கள். எனவே இந்த ஆவணங்களைப் பாதுகாப்பது அவசியம், மேலும் அவை தற்போது அலுவலக அறையில் உள்ள சில அலுமாரிகளில் சேமிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த பழைய பதிவுகளில் பெரும்பாலானவை தற்போது சிதைந்து மங்கி வருகின்றன. ஊழியர்கள் தங்கள் அன்றாட கடமைகளை முடிக்கும்போது இந்த பழைய தகவல்களைக் கண்டுபிடிக்க அதிக முயற்சி எடுக்க வேண்டியிருப்பதும் ஒரு சிக்கலாகும். இந்த தற்போதைய சூழ்நிலையிலிருந்து விடுபட பாடசாலை நிர்வாகம் ஒரு தானியங்கி தகவல் அமைப்பை நிறுவ முடிவு செய்துள்ளது.

மேலே உள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்கவும்.

a) இந்த அமைப்பின் தேவைகளை அடையாளம் காண பயன்படுத்தக்கூடிய தரவுகளைச் சேகரிக்கும் இரண்டு முறைகளை தருக?

b) முதலில் அமைப்பை உருவாக்குவதற்கான தேவைகளை அடையாளம் கண்டு, பின்னர் பொருத்தமான தீர்வுகளைத் திட்டமிடுவதே கல்லூரி முதல்வரின் கருத்தாகும். இச் செயற்பாட்டிற்கு பொருத்தமான முறைமை அபிவிருத்தி மாதிரியம் யாதாக இருக்கலாம்?

c) இந்த தானியங்கி அமைப்புகளைப் பயன்படுத்துவதற்கு
   i. இரண்டு உள்ளீட்டு சாதனங்களை தருக.
   ii. இரண்டு வெளியீட்டு சாதனங்களை தருக.


d) "இருப்பினும், இதுவரை நாம் செய்தது போல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மதிப்பெண் புத்தகத்திலும் மதிப்பெண்களை வைத்திருப்பது நல்லதுதானா?" இந்த துணை முதல்வரின் யோசனை எந்த முறைமை நடைமுறைபடுத்தலுடன் ஒத்துப்போகிறது?

e) மேலே வினா (b) இல் நீங்கள் குறிப்பிட்டுள்ள முறைமை அபிவிருத்தி மாதிரியின் இரு நன்மைகளைக் குறிப்பிடவும்.

f) இந்த அமைப்பில் முறைமை வடிவமைப்பாளரினால் தீர்வுகளைச் சோதிக்கப் பயன்படுத்தக்கூடிய ஒரு இறுதிச் சோதனை முறையைக் குறிப்பிடவும்.

***05.***

(i) ஒரு சொல் முறைவழிப்படுத்தி மென்பொருளின் இலக்கமிடப்பட்ட இடைமுகத்தை கீழேயுள்ள உரு காட்டுகின்றது.




மேலேயுள்ள இடைமுகத்திலுள்ள சம்பந்தப்பட்ட இலக்கங்களைப் பயன்படுத்தி (b) முதல் (j) வரையான ஒவ்வொரு கொள்பணியும் எவ்வாறு செய்யப்பட முடியும் என எழுதுக. (a) இற்கான விடையானது ஒரு உதாரணமாகத் தரப்பட்டுள்ளது.

(a) ஒரு வசனத்தை தடித்ததாக (Bold) மாற்றுதல்

***உரைத் துண்டைத் தெரிவு செய்தல் → 14 இனைச் சொடக்குதல்***

(b) H2O எனும் சொல்லை $H_2O$ ஆக மாற்றுதல்

(c) ஒரு உரைத்துண்டை மத்தியில் சமப்படுத்தல் (center justifying)

(d) ஒரு உரைத்துண்டு ஒன்றின் எழுத்துக்களின் நிறத்தை சிவப்பு நிறமாக மாற்றுதல்

(e) ஒரு உரைத்துண்டிற்கு வழங்கப்பட்ட அனைத்து வடிவமைப்புக்களையும் நீக்குதல்

(f) ஒரு இலக்கப் பட்டியலை ஆரம்பித்தல்

(g) ஒரு சொல்லின் கீழ்க் கோடிடுதல் (Under line)

(ii) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் “Save As” எனும் கருவி பயன்படுத்தப்படுவதன் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

(iii) இலக்கமுறை வரைபியல் தொடர்பான பின்வரும் A தொடக்கம் D வரையான கூற்றுக்களைக் கருதுக. அக் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் உண்மை அல்லது பொய் எனில் முறையே ✓ அல்லது × என்னும் குறியீடுகளை ஒவ்வொரு முகப்படையாளத்திற்கும் எதிரே எழுதுக.





A – இலக்கமுறை வரைபு, படமூலங்களின் அணி / கூட்டமாக காணப்படுமெனில் அது பிட்படம் (bitmap) என அழைக்கப்படும்.

B – பரவல் வரைபை பெரிதாக்கும் போது, படமூலங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

C – பாதிப்படையும் நெருக்கத்திற்கு TIFF கோப்பு வகை ஓர் உதாரணமாகும்.

D – ஓர் பரவல் வரைபானது நேர் கோடுகள் / வளை கோடுகளின் தொகுதியினைக் கொண்டிருக்கும்.

(iv) ஓடாசிற்றிச் (Audacity) செவிப்புலப் பதிப்பு மென்பொருளின் ஒலிப்பதிவுக் கருவிகளை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஒலிப்பதிவு கருவிகளுக்கான படவுரு |  |  |  |  |
|---|---|---|---|---|
| படவுரு எண் | ① | ② | ③ | ④ |

① - ④ வரை முகப்படையாளமிடப்பட்ட படவுருக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விபரணத்தை கீழே தரப்பட்ட A – D வரை முகப்படையாளமிடப்பட்ட பட்டியலிலிருந்து தெரிந்தெடுக்க.

மேலே அட்டவணையில் தரப்பட்ட படவுரு எண்ணிற்கு பொருந்தும் விபரண முகப்படையாளத்தை, **படவுரு எண் → விபரண முகப்படையாளம்** என்ற வடிவில் எழுதுக.

***விபரண பட்டியல்:***

A: தெரிவு செய்யப்பட்ட ஒலியினை நிசப்தத்தால் (silence) மாற்றீடு செய்கின்றது.

B: ஒலியினை இயக்குவதற்கான (playback) தொடக்கப்புள்ளியைத் தெரிவு செய்தல் அல்லது இயக்குவதற்கு (play) அல்லது பதிப்புச் (edit) செய்வதற்கு ஒலி வீச்சினை தெரிவு செய்து சொடக்கி (click) இழுப்பதற்கு (drag).

C: ஒலியினை பதிவு செய்ய ஆரம்பித்தல்.

D: தெரிவிற்கு வெளியேயுள்ள ஒலிகள் அனைத்தையும் அகற்றல்.

***06.*** ஒரு நான்கு பக்க சீரான நான்முகிஅதில் முகங்கள் A,B,C மற்றும் D எனபெயரிடப்பட்டுள்ளன. இதனை 10 முறை எறியும் போது கிடைத்த மதிப்புக்கள் X என்ற அணியில் (array) சேமிக்கப்பட்டுள்ளன.


| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | A | D | A | B | A | A | D |

(i). பஸ்கால் (Pascal) செய்நிரலில் மேற்குறித்த அணி X இனை வரையறுக்குக.

(ii) இதில் A முகம் எத்தனை முறை வந்துள்ளது என்பதை கணக்கிட P,Q,R,S எனக் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் வரவேண்டியவற்றை தருக

```
Begin
count=0
i=0
while i< = … P…..
if X [ …Q..] = ‘A’ then
        …R… =count+1
        end if
        i=i+1
      ……S……..
display count
end
```

(iii). மேற்குறித்த போலிக்குறிக்கமைவாக பின்வரும் பாய்ச்சற்கோட்டுப்படத்தில் A,B,C,D,E ஆகிய முகப்படையாளங்களுக்குரியவற்றை தருக




***07.*** (i) **A** முதல் **J** வரை முகப்படையாளமிடப்பட்ட ஒவ்வொரு விவரணத்தையும் கீழே இலக்கமிடப்பட்ட பட்டியலில் உள்ள சரியான உருப்படியுடன் பொருத்தி, ஒவ்வொரு முகப்படையாளத்திற்கும் பொருந்துகின்ற உருப்படியின் இலக்கத்தை **முகப்படையாளம் → இலக்கம்** எனும் வடிவத்தை **மாத்திரம்** பயன்படுத்தி எழுதுக


| முகப்படையாளம் | விவரணம் |
|---|---|
| A | வலையமைப்பில் கணினி ஒன்றினை அடையாளம் காணப் பயன்படும் நெறிமுறை |
| B | இணையச் சேவை வழங்குனர் |
| C | தொலை அணுகலிற்கு பயன்படும் மென்பொருள் |
| D | இது ஒரு சேவைப் பயனர் தருநர் மாதிரியாகும் |
| E | வலைத்தளம் ஒன்றினை அடையாளம் காண பயன்படும் |
| F | ஆள்களப்பெயரை பராமரிக்கும் நிறுவனம் |
| G | வலைத்தள பக்கம் ஒன்றினை அடையாளம் காண பயன்படும் |
| H | பாரிய கோப்புக்களை இடமாற்ற பயன்படும் மென்பொருள் |
| I | மேல்மட்ட ஆள்களப் பெயர் |
| J | நிலைத்த இணையத்தளங்களை உருவாக்க பயன்படும் மென்பொருள் |

பட்டியல்: {**1**-URL, **2**- ICANN, **3**- Kompozer, **4**- Airtel, **5**- Filezilla, **6**- TeamViewer, **7**- Srilanka.lk, **8**- இணையம், **9**- IP, **10**-ஆள்களப் பெயர், **11**- .lk, **12**- joomla}

(ii) வலைப் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள HTML குறிமுறைத் பகுதியினால் காட்சிப்படுத்தப்படும் வருவிளைவினை வரைக.

```
<dl>
        <dt><strong>JavaScript</strong></dt>
        <dt>HTML</dt>
        <dd>HyperText Markup Language</dd>
        <dt>CSS</dt>
        <dd>Cascading Style Sheets</dd>
</dl>
```

(iii) உரு 1 இல் தரப்பட்டுள்ள வலைப்பக்கத்தின; HTML ஆதார மூலம் உரு 2 இல் முகப்படையாளங்கள் 1 முதல் 16 வரை தவறவிடப்பட்ட சில அடையாள ஓட்டுக்களுடன் (Tags) தரப்பட்டுள்ளது.



## The Sports Meet

Welcome to our sportsmeet ............

The sportsmeet will be held on 13th October 2015 . Please participate the events and win prizes.

We offer following activity choices

1. Indoor Games
    - Chess
    - Scarables
2. Outdoor Games
    - Netball
    - Throw ball

Time Schedule

| Game | Date 15.10.2015 |
|---|---|
| Chess | 09.30AM |
| Scrable | 11.30AM |
| Netball | 02.00PM |
| Throw ball | 04.00PM |

For inquires mail to us

**உரு 1 : வலைப்பக்கம்**

```
<html>
<head><title>Sports Meet</title></head>
<body>
<h1>① The Sports Meet ② </h1>
<hr>
<p>
Welcome to our sportsmeet ……………③
The sportsmeet will be held on 13th October 2015. Please participate the events and win prizes.
③
We offer following activity choices
</p>
<p><ol>
        ④ <u>Indoor Games</u>⑤
        <ul ⑥="square">
                ④ Chess⑤            ④ Scarables ⑤
        </ul>
        ④ Outdoor Games ⑤
        <ul ⑥= "⑦ ">
                ④ Netball ⑤  ④ Throw ball ⑤
        </ul>
</ol></p>
①<table ⑧ = "1">
        ⑨Time Schedule⑩
        ⑪⑬Game⑭⑬  Date 15.10.2015⑭⑫
        ⑪⑬Chess⑭⑬  09.30AM⑭⑫
        ⑪⑬Scrable⑭⑬  11.30AM⑭⑫
        ⑪⑬Netball⑭⑬  02.00PM⑭⑫
        ⑪⑬Throw ball⑭⑬  04.00PM⑭⑫
</table>②
<hr/>
① For inquires <⑮href="link.html">mail to us⑯②
</body>
</html>
```

**உரு 2: HTML ஆதாரம்**

முகப்படையாளங்கள் 1 முதல் 16 வரையுள்ள உரு 2 இன் சரியான அடையாள ஒட்டுக்களைக் கீழே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தெரிவு செய்க. ஒவ்வொரு **முகப்படையாளத்தின் இலக்கத்தையும்** அதனுடன் தொடர்புடைய **HTML அடையாள ஒட்டையும்** எழுதுக.

**பட்டியல்**: {</a>, </tr>, border, </caption>, <li>, circle, <center>, </td>, </li>, <br/>, <td>, a, type, <caption>, <tr>, </center>}